REGD No M 4842

திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10. | 11-11-51 | இதழ் 20.

கை கொடுக்கும் கன்னடம்

[தில்லை-வில்லாளன்]

சந்தனக் காடுகள்! அவைகளில் ...றுகள் களிநடை பழகும்! இந்தக் ...ட்சியின் நிலைக்களன் கன்னடம்! ...ாவிடத்தின் எழிலூர் அது—அது ...ார்முரசு கொட்டிவிட்டது டெல்லி ...பாரை எதிர்த்து! இமயமுதல் ...ரிவரை அந்த எதிர்ப்பு சங்கநா... எதிரொலிக்கிறது! இந்தியத் ...ணைக்கண்டத்தின் ஜனாதிபதி ...ஜேந்திரரின் ஆணைக்கு முடி ...ணிய மறுத்துவிட்டது! திராவிடத் ...ன் முதல் முழக்கத்தை எழுப்பியுள் ...து கன்னடம்.

இதனை அறியாமல்......ஆந்திரத் ...ார் ஆதரிக்கவில்லை! மலையாளத் ...ார் மனமொப்பவில்லை! கன்னடத் ...ார் கைகொடுக்கவில்லை! ஆனால் தமிழகத்தில் மட்டும் திராவிடநாடு கேட்கிறார்கள், என்கிறார்கள்!

வழுக்கும் மொழி பேசி, நம் உரிமைப்போருக்கு இழுக்கு கற்பிக்கிறார்கள் சிலர்! அவர்கள் ஆந்திரத்தில் அடியெடுத்து வைத்ததில்லை! மலையாளத்தில் தங்கி மகிழ்ந்ததில்லை! கன்னடத்தைக் கண்டதில்லை! தமிழகத்திலே உலவிக்கொண்டே, அப்படிப் பேசுகிறார்கள்!

அவர்கள் ஆந்திரம் சென்று, பிரகாசம் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியது போல, ரங்காவுடன் நீண்ட நேரம் விவாதித்தது போல, ஆந்திரத்தார் ஆதரிக்கவில்லையென அரற்றுகிறார்கள்! அவர்கள் கேளப்பனைக் கண்டதில்லை, கேசவ நாயரைப் பார்த்ததில்லை. இருந்தும் மலையாளத்தார் மனமொப்பவில்லையென மனங் கூசாது பேசுகிறார்கள்! நிஜலிங்கப்பாவுடன் நேரில் கண்டு பேசினரா? கன்னடம் செல்லாத அக்கனவான்கள், கன்னடம் கைகொடுக்கவில்லை யெனக் கதறுகிறார்கள்!

நாம் தமிழகத்திலேயே உலவுகிறோம் என்று, அவர்களும் தமிழகத்திலே இருந்துகொண்டு பேசுகிறார்கள்! இல்லை, ஏசுகிறார்கள்!!

அவர்களுக்கு அடிக்கடி நாம் கூறிவருகிறோம், ஆந்திரத்தார் ஆதரிக்கும் நாள் அண்மையில் தானிருக்கிறது. மலையாளத்தார் மன

தி. மு. க. பொதுக்குழுக் கூட்ட அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம்.

நவம்பர் 17, 18 சனி ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும், மதுரை, மாரியம்மன் தெப்பக் குளத்திற்கருகிலுள்ள முத்துச் சந்திர மண்டபத்தில், பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், கழக சட்டதிட்டம், மாநில மாநாடு, பொதுத் தேர்தல் ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும். பொதுக்குழு உறுப்பினர்களுக்குத் தனி அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அழைப்புகள் வரத் தவறியிருந்தாலும், இதனையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டுகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை.

நீதிபதி ஒரு கூண்டில்! வழக்கறிஞர் குற்றவாளி கூண்டி...

மொப்பும் சந்தர்ப்பம் வெகு விரைவில் வந்துவிடும். கன்னடத்தார் கை கொடுக்கும் தினம் வர அதிக காலம் பிடிக்காது எனக் கூறி வருகிறோம்!

ஆம், அத்தகைய திருநாள் இதோ வந்துவிட்டது! அறப்போர் தினம் உதயமாகிவிட்டது!

கை கொடுக்கவில்லையெனக் கை கொட்டி, ஒத்த ஓசைச் சொற்களை யோட்டி, நம்மைத் திட்டி, அதனால் அலுத்தமர்ந்துவிட்ட அரசியல் சோம்பேறிகளைத் தட்டி, பணந் திரட்டி, பதவியை எட்டிவிடலாம் எனப் பகற்கனவு காண்போருக்கு பகிரங்க அறிவிப்பு போல, கன்னடம் போர்முரசு கொட்டிவிட்டது!

கன்னடம் கை கொடுத்து விட்டது! கண்ணுள்ளோர் காணட்டும்! காதுள்ளோர் கேட்கட்டும்!

கன்னடம் முழக்கிடும் அறப்போரின் பேரிகை ஒலி, கனத்த குரல் பேசி, காதைச் செவிடாக்கிக் கொண்டுள்ளோருக்கு வேண்டுமானால் கேட்காமலிருக்கலாம்! கருத்து மிகுதியால் செவியும், சிந்தனையும் கூர்மையாக உள்ளவர்களுக்கு பேரிகை ஒலி மட்டுமல்ல, ஒலியின் உட்பொருள், அந்த உட்பொருளின் பதவுரை, அந்தப் பதவுரையின பொழிப்புரை, அந்தப் பொழிப்புரையின் கருத்துரை, அத்தனையும் தெரியும்!

கன்னடம் நமக்கு கைகொடுக்கிறது என்கிறோம். எனவே, திராவிட நாட்டுடன் சேர்ந்தே பணியாற்றுவோம் எனத் தீர்மானம் போட்டு விட்டதோ என்று கேட்கிறீர்கள்? இல்லை. ஆனாலும், கன்னடம் கைகொடுத்துவிட்டது என்று கூறுகிறோம்!

திராவிட நாடு திராவிடருக்கே என்று இதயத்தின் அடிவாரத்திலிருந்து எழும்புகிற அந்த ஒலி, எத்தர்களின் சத்தமல்ல—இலட்சியவாதிகளின் இதய முழக்கம்! இன்று முழங்கி, நாளை முடிந்துவிடக்கூடியதல்ல! வாழ்ந்திருந்த ஒரு சமுதாயத்தினரின் சரிந்த சாம்ராஜ்யம், திராவிடநாடு, அதனைக் கேட்கிறோம், மீண்டும்! ஆகவே அந்த ஒலி எழும்பும் பொழுது, நமக்கு உணர்ச்சி பொங்குகிறது! இதயம் உற்சாகத்தால் வீங்குகிறது!

நமது இதய ஒலி எழும்பும் பொழுதே, அதன் தொனிடபொருளும் கேட்கிறது!

திராவிட நாடு, திராவிடருக்கே என்றால், வடநாட்டாதிக்கத்திலிருந்து, பிரிந்து வாழ்வதே—ஓசையினிடையே, நமக்குத் தரும் விளக்கவுரை அதுதான்!

இந்த விளக்கவுரையை கன்னடம் தெளிவாகக் கேட்டிருக்கிறது! இன்று தீர்மானமாகப் போரிடத் துவங்கி விட்டது!

இன்று, கன்னடத்தில் பேரிகை முழங்குகிறது! சங்கநாதம் கேட்கிறது! போர் வீரர்களின் பாசறைப் பேச்சு, செவிகளில் ஒலிக்கிறது. அவர்களின் வீரவுரை, கோழையின் குருதியிலும் சூடேற்றுகிறது! குனிந்த முதுகினைர நிமிர்த்துகிறது! பாசறைத் தலைவரோ, வீரர்கள் பேச்சைக் கேட்டு, விருந்து அருந்திடுபவர் போல, மகிழ்கிறார்!

கன்னடம் தொடுத்துவிட்டது அறப்போர்! இனி, வடவராதிக்கத்தினை எதிர்த்திடுவது என்று முடிவு செய்துவிட்டது!

இதனை, கன்னடம் நமக்கு அறிவித்துவிட்டது! டெல்லி ஆட்சியாளருக்குப் தெரிவித்துவிட்டது!!

* * *

மைசூரின் உயர் நீதிபதி மேடப்பாவை சிலர் விஷமிட்டுக் கொல்ல முயன்றார்கள். அந்த சதியிலிருந்து அவர் தப்பிப் பிழைத்தார்.

அவர் போலீசுக்கு தகவல் தந்தார். அதன் பேரில், கொலை வழக்கு உருவாயிற்று!

எல். எஸ். ராஜு மற்றும் சிலரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, நடந்து வந்தது.

இது சாதாரண கொலை வழக்கு. ஒரு நீதிபதியைக் கொல்ல சிலர் சதி செய்தார்கள் என்பதே வழக்கிலுள்ள முக்கிய சாராம்சம். இதைவிடப் பயங்கர கொலை வழக்குகள் நடைபெறுகிறபொழுது இதனை மக்கள் அதிக அக்கறையுடன் கவனிக்கவில்லை!

இந்த வழக்கில் சதிக்காளான...
நீதிபதி! சதி செய்ததாகச் செ...
லப்படுகிறவர் ஒரு வக்கீல்! இ...
தான் ருசிகரமான தகவல்கள்.

கொல்ல முயற்சிக்கப்பட்ட...
நீதிபதி! கொல்ல முயன்றதா...
குற்றம் கூறப்படுபவரோ, வழக்...
ஞர்! இவர்கள் நீதி இலாக்கா...
இரண்டு அங்கங்கள்! இவ்வ...
தான் வழக்கிலுள்ள புதுமை.

மேலும் நீதிபதியும் ச...
வில்லை. விஷமிட்டவர்களி...
விஷமோ வேலை செய்யவில்...
ஆகவே இந்த வழக்கு அவ்வ...
அதிக கவனத்தை இழுக்க முடி...
வில்லை

ஓராண்டாக வழக்கு நடந்து வ...
கிறது! ஒருவித கிளர்ச்சியும் ஏற்ப...
விலலை!

ஆனால், மைசூர் அரசாங்கமே...
மருளும்படி, டெல்லி ஏகாதிப...
தியம் நடந்துகொண்டது இ...
வழக்கில்!

மத்திய சர்க்காரின் மந்திரிக...
மைசூர் வராமல் போவதில்லை! உ...
லாசப் பொழுது போக்க, அவ...
கள் அங்கு போய் திரும்பா...
தென்னிந்திய சுற்றுப் பிரயா...
மில்லை! காங்கிரஸ் அதிர்ச்சி வை...
தியமே ஆரம்பித்தது அங்குதா...
கண்ணாடி மாளிகையிலிருந்...
கைதட்டி, தோள்தட்டி ஆர்ப்பரி...
ததும் அங்குதான்!

கண்டை நிகர் கன்னட மொழி...
பேசும் பூமியிலேதான், மத்தி...
ஆட்சி, தன் கைவரிசையைக் காட்டி...
விட்டது! கன்னடம் கலங்கிவிட...
வில்லை!

முதலிலிருந்தே, மத்திய ஆட்சி...
யின் மமதை மனப்பான்மை...
எதிர்த்து வந்தது!

கன்னடம் வந்த கனம்கள்...
ராஜு வழக்கைப் பற்றிப் பேசின...
அதன் காரணம் தெரியவில்லை!

தீர்ப்பும் தரவில்லை! அப்படி...
தந்திருந்தாலாவது, ஏதேனு...
திடுக்கிடும் சந்தர்ப்பங்கள் ஏற்ப...
டிருக்கலாம் என்று கூற முடியு...

ஒரு சாதாரண கிரிமினல் வழக்...
நடந்துகொண்டிருக்கிறது! இ...
வழக்கினால் எந்தவிதமான இடை...
யூறும் ஏற்படவில்லை!

புழுதியோடு புழுதியாய் புதைந்து போயின

ந்த வழக்கு நடப்பதை மக்கள்
க்கிருர்கள்! மக்கள் மனக்
திப்பு வளர்கிறது! ஏனெனில்
ம் சாட்டப்பட்டவர்கள் மக்
தலைவர்கள்! ஆகவே, இந்த
க்கு பெரிய கொந்தளிப்பை
த்துவிடும் என்று கூறுவதற்
ல!

ந்த வழக்கு நீதிபதிக்கும்,
க்கறிஞருக்கும் இடையே இருப்
ல், யாரும் நீதி வழங்க முடி
என்று கூறிவிட்டனரா?
ல.

ரிகள் பஞ்சமாகிவிட்டனரா?
மன்றம் மூடப்பட்டுவிட்டதா?
ல.

தி இலாக்கா, திறமையற்றதா?
யாவிலேயே புகழ் வாய்ந்த
பரிபாலனம் அங்கு நடக்கிறது!

ரிலுள்ளோர் பாராட்டும்வகை
நீதி பரிபாலிக்கும் நீதிபதிகள்
ந்துள்ளார்கள் அங்கு

ஜா வழக்கு அங்குநடக்கிறது!
ல் எந்தவித குற்றமும் வந்து
ந்துவிட வேண்டிய அவ
மோ, சூழ்நிலையோ கிடையாது.

ந்த வழக்கில் சம்மந்தப்பட்ட
கள் நீதியின் மீது சந்தேகப்
டதாகத் தெரியவில்லை. வழக்கில்
ம நீதிபதிக்கே சம்பந்தமிருப்
ல் நீதி வழங்குவதில் சந்தேக
ந்தால் அவர்கள் எப்பொழுதே
றச்சித்து, வழக்கை இடம்
றவழியிருந்திருக்கிறது. செய்ப
லை, தேவையில்லாததால்!

ஆலோசனைகள்வேறு அள்ளிவீசி
கனம்கள், கன்னடம், அலட்சிய
அவைகளைக் கேட்டது! மந்திரி
ந்தவுடன், அந்த ஆலோசனை
ம் பறந்தன காற்றோடு! அவர்
யோசனைகள் புழுதியோடு, புழு
ய் போயின!

ஜா வழக்கில், அவர்கள் தலை
வதையே, கன்னடத்திற்கு
க்கா செய்யும் அவமானம்
று கருதினர்!

அவர்கள், இந்த வழக்கு பற்றிப்
சம்பொழுதெல்லாம், வெறுப்
டு கேட்டனர்! வேதனையுடன்
னினர்!

கன்னடத்தார் டெல்லி தந்த
ண்டு முறைகளையும், இந்த
வழக்கு சம்பந்தப்பட்ட வரையில்
கையள மறுத்து விட்டனர்!

ராஜா வழக்கை, கன்னடத்தைத் தாண்டி, வேறு பிரதேசங்களில், விசாரிக்கச் செய்யவேண்டும் என்று மத்திய ஆட்சி கூறியதற்கு விளக்கமில்லை காரணமில்லை. ஆனாலும் அவர்கள் சொன்னார்கள்!

அந்த வழக்கு அங்கேயே நடப்பதால் அரசியல் பூகம்பம் ஏதும் ஏற்படவில்லை! நிர்வாகக்கடல் பொங்கி பிரளயம் வந்துவிடவில்லை! நீதி எரிமலையாகி வெடித்து நாசம் விளைந்து விடவில்லை! இருந்தும், வழக்கை மாற்றச் சொன்னார்கள் அவர்கள்.

கன்னடத்தில் எத்தகைய, நெருக்கடியும் ஏற்படாத பொழுது, அந்த வழக்கை மாற்றவேண்டிய அவசியம் என்ன வென்று அவர்களுக்குப் புரியவில்லை! ஆகவே அவர்கள், வழக்கை மாற்றவில்லை! மத்திய ஆட்சியின் வார்த்தைகளை மதிக்கவில்லை!

மைசூரைச் சேராத, வெளிராஜ்யங்களிலிருந்தாவது, நீதிபதிகளைக் கொண்டு வந்து வழக்கை நடத்த வேண்டும் என்றனர், கனம்கள். இதுவும் கன்னட நாட்டவரின் இதயத்திலே கனத்ததோர் சுமை ஏற்றப்பட்டதாகவே முடிந்தது! அவர்களுக்கு இது தாங்கமுடியாத அவமானமாகப்பட்டது! மைசூர் நீதிபதிகள்மீது வந்த மாசு என்ன? அவர்கள் நீதி பரிபாலனத்தில் படிந்துள்ள தூசு யாது? மாற்றமுடியாத மாசு, துடைக்கமுடியாத தூசு இருந்தால், இந்த வழக்கில் என்ன, எந்த வழக்கிலும்தான் நீதி கிடைக்கமுடியாது! அப்படியானால், நீதி இலாக்காவை இழுத்து மூடிவிட வேண்டியதுதான் என்று எண்ணினர். ஆகவே, வெளிநாட்டிலிருந்து, நீதிதேவர் இறக்குமதியை அவர்கள் ஒப்பவில்லை!

மத்திய ஆட்சியாளர், ஒரு ராஜ்யத்தின் சொந்த விவகாரங்களில் தலையிடுவதே தவறு. அந்தத் தவறைக் கன்னடம் கண்ணியத்துடன் தாங்கிக் கொண்டது! தவறுக்கு மேல், தவறு செய்யத் தொடங்கிற்று மத்திய ஆட்சி! எதிர்த்தது கன்னடம்! தவறை தழைக்கவிடக் கூடாது என்று தடுத்துவிட்டது!

திராவிடத்தின் ஒரு கூறு, கன்னடம். அங்கு, மத்திய ஆட்சியை எதிர்த்து போர்! இதனைக் காணும் நமக்கோ, கன்னடம் கைகொடுத்து விட்டது என்ற களிப்பு ஏற்படாமல் போகுமா? கன்னடத்தினைக் காணக் காண மகிழ்கிறோம்.

* * *

கன்னடத்தின் உரிமை யுணர்ச்சி கண்டு டெல்லி, தனது எதேச்சாதிகாரத்தை நீட்டிவிட்டது!

கன்னடம் நமக்கு கைகொடுத்து விட்டது! ஆனால், டெல்லியோ, தனது எதேச்சாதிகார இரும்புக்கரத்தை, நீட்டிவிட்டது!

மத்திய ஆட்சி கூறிய யோசனைகள் மண்ணைக் கவ்வின கன்னடத்தில் என்பதைக் கண்டதும், இந்திய அரசியல் திட்டமெனும் அம்புறாத்தூணியைத் துருவித்துருவி, ஒரு அடக்குமுறைச் சட்ட சாத்தைத் தேடியெடுத்து வீசி விட்டது!

இந்திய அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்ட விதத்தை எண்ணினால் இப்பொழுதும் வேதனையாகத் தானிருக்கும்.

இந்திய நாட்டில் மூன்று வகை ராஜ்யங்கள் பிரிக்கப்பட்டன.

A, B, C ராஜ்யங்கள் என அவை பெயரிடப்பட்டன.

B பிரிவில் சமஸ்தானப் பிரதேசங்கள் இடம் பெற்றன.

இந்தப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அன்று அரசியல் நிர்ணயசபையிலே, ஒரே கேள்விகள் மயமாக இருந்தது!

ஏக இந்தியா என்று பேசிவிட்டு, இதிலேயே தரம் பிரிப்பானேன்? அதிலும் ஒரு பிரிவுக்கு இல்லாத சட்டம், இன்னொரு பிரிவிற்கு ஏன், இது அநீதி, இது கூடாது, இது ஆகாது, என்றெல்லாம் பேசினார்கள்!

அன்று அது, இந்திய அரசியல் திட்டத்தில் 306 பிரிவாகஇருந்தது. இன்று 371 பிரிவாக இருக்கிறது.

இதன்படி, B பிரிவிலுள்ளவை, ஜனாதிபதி அனுப்பும் கட்ட

சட்டசபையே பாசறையாயிற்று!

களையே நிறைவேற்றியே தீர வேண்டும்!

இந்த சட்டம், அரசியல் நிர்ணய சபையில் வந்தபொழுது எதிர்த்தனர். அப்பொழுது இதற்கு கூறப்பட்ட சமாதானம், இது, அவசர கால சட்டமே தவிர, வேறொன்றுமில்லையென்பதே!

ஆனால் இன்று, அந்தச் சட்டத்தின் பேரால், ராஜா வழக்கை, சென்னைக்கோ, பம்பாய்க்கோ மாற்றச் சொல்லியிருக்கிறார் ஜனாதிபதி! இந்த கட்டளை கண்ட கன்னடம் போர்க்கோலம் பூண்டுவிட்டது!

ஜனாதிபதி அனுப்பிய ஆணையைப் பிரதமர் கே. ஸி. ரெட்டி பார்த்தார்! டெல்லியின் அகம்பாவ போக்கை அவரால் சகிக்க முடியவில்லை! அவர் உடனே, சட்டசபையைக் கூட்டி, டெல்லி கட்டளையைக் கூறினார்!

சட்டசபை, அன்று பாசறையாக இருந்தது! சட்டசபை உறுப்பினர்கள், போர்வீரர்கள் போலவே வீற்றிருந்தனர்! அவர்கள், 'பேச்சு, வீரம் கலந்தே வந்தது, அவர்கள் மூச்சு, வெற்றியின் வாடை குழைந்தேயிருந்தது!

பிரதமர் டெல்லி கட்டளையைக் காட்டினார்! உடனே, பீமப்பநாயக் தீர்மானம் கொண்டுவந்தார்! டெல்லியின் கட்டளை அநீதியானது, அவசியமற்றது, அதனை ஏற்க முடியாது! கன்னடத்தின் மானத்தைக் காற்றில் பறக்கவிட, இங்குள்ளோர் சோற்றுத் துருத்திகளல்ல, சொரணைகெட்ட சோம்பேறிகளல்ல, வீரர்கள் என்று முரசு கொட்டினார்!

ஒரு ராஜ்ய சர்க்கார், இம்மாதிரி நடந்துகொண்டால், கிராம பஞ்சாயத்து கூடத் தாங்கிக் கொள்ளாது!

மத்திய ஆட்சி, தன் கீழுள்ள ராஜ்யங்களை, கிராமப்பஞ்சாயத்தை விடக் கேவலமாக நினைத்தாலன்றி இப்படி நடக்காது! ஒரு சாதாரண வழக்குக்காக, மிக பயங்கரமான நெருக்கடி நேரத்தில் உபயோகப் படுத்தவேண்டிய, சட்டத்தைக் கொண்டு, சமர் புரிகிறதென்றால், யார்தான் பொறுத்துக் கொள்ள முடியும்?

பட்டேல் பலமுறை விளக்கியிருக்கிறார், இந்தச் சட்டத்தைப் பற்றி! அவர், அவசரகாலங்களில் இந்த சட்டம் பயன்படுத்தப்படுமே தவிர, வேறுகாலங்களில் உபயோகப்படுத்தப் படமாட்டாது என்று உறுதி கூறியிருக்கிறார், அவர் உயிருடனிருந்தபொழுது! இரும்பு மனிதர் தந்த உறுதியும் இன்று குலைந்து, மிகச் சாதாரண சந்தர்ப்பத்தில் உபயோகப்படுத்தியிருப்பதைக் காண, கன்னடம் துடிக்கிறது!

கிராமப் பஞ்சாயத்திற்கு இருக்கிற உணர்ச்சியைவிட, ஒரு பெரிய ராஜ்யத்திற்குக் குறைவாக உணர்ச்சி இருக்கமுடியாது என்று காட்டியுள்ளார் பீமப்பநாயக்.

இந்த சட்டத்தை பயன்படுத்த வேண்டிய அவசியமே இல்லாத பொழுது, அதனை பயன்படுத்துவானேன்? மத்திய ஆட்சியின் மட்டற்ற அதிகாரத்தை மக்களுக்கு காட்டவா? அப்படியானால், மக்களின் சக்தியையும், மத்தியசர்க்கார் உணரத்தான் வேண்டும்.

கன்னட மக்கள், ஒன்று திரண்டுவிட்டனர். மத்தியசர்க்காரின் கட்டளையை ஏற்க முடியாது! கன்னடத்தில் மட்டுமல்ல, இத்தகைய சட்டம், தேசத்தின் எந்தப் பகுதியிலும் தலைகாட்டக் கூடாது என்று தீர்மானித்து விட்டனர்! அதற்காக அறப்போர் தொடுக்கவும் அஞ்சவில்லை!

நாயக் கொண்டுவந்த தீர்மானம், கோவிந்தரெட்டி வழிமொழிய நிறைவேறிவிட்டது!

மத்திய சர்க்காரை எதிர்த்து, மாகாண சர்க்கார் போரிட தீர்மானித்துவிட்டது!

கன்னடம், இந்த யுத்த காண்டத்தில் தலைமை வகிப்பது காண பாராட்டுகிறோம். கன்னடம் கைகொடுக்கவில்லையெனக் கதறிடுவோர், கன்னடம், போர்த்தாக் கீதை அனுப்பிவிட்டது என்பதைக் கண்டு தெளியட்டும்!

* * *

விடுதலை வேட்கை வேகமாகப் பரவிவரும் காலம் இது.

உரிமை மலரின் உண்மை ம
மக்கள் மனத்திற்கு இதந்
இப்பொழுது, மந்திபோல் பாய்
மலரைக் கசக்கியெறிந்தா
கோலெடுத்தால் குரங்காடும் எ
குழந்தைப் பழமொழியைக் கே
வர்களுக்கு, கோலெடுக்கத்தா
தோன்றும்.

வீணையின் நாதத்தின் இனி
யிலே, மக்கள் இலயித்துக்கிடக்
பொழுது, வம்பனொருவன், அ
நரம்புகளை அவர்கள் கண்முன்
அறுத்தால் விடுவார்களா? கை
புடைத்து, அவன் நரம்புகளை
லவா அறுத்து விடுவார்கள்!

மத்திய சர்க்கார் மந்திபா
காண, கன்னடம் கோல்
விட்டது!

மத்தியசர்க்கார் வம்பளவதா
ரையப்புடைக்க, கைகளை ஓ
கிறது கன்னடம்!

இந்த நேரத்தில்தான் திரா
நாடு திராவிடருக்கே என்ற
இருதய கீதத்தின் உண்மை
பொருள் விளங்கும்.

திராவிடநாடு வேண்டாம் எ
போரின் வீணுரைகள், கன்ன
மூட்டியுள்ள தீயிலே பொசு
விடும்.

அரசியல் புற்றுகளில் சந்தர்
சர்ப்பங்கள் சில நேரங்களில் கி
புவதுண்டு. அவை, இந்த நெ
பிலே, சாம்பலாகும்.

திராவிடநாடு நாம் கேட்கிறோ
என்றால், இன்று திராவிடநா
நாயக் குறிப்பிடுவதுபோல, கிராம
பஞ்சாயத்தைவிடக் கேவலமா

(9-ம் பக்கம் பார்க்க)

கண்ணீர்த் துளிகள்!

அவள் கதையைச் சொல்லின.

காதல் அவளைமாய்த்தது!

ஏன் ?

டி. கே. மூர்த்தி சித்தரித்த

'கன்னியின் கண்ணீர்'

புதிய நூல்

உங்கட்கு கிடைக்கும்!

விலை 8 அணா

சரோஜினி பதிப்பகம் புதுச்சேரி.

பஞ்சம் பறக்கிறது!

பணத்தைப் பற்றிக் கவலையில்லை! பஞ்சம் பறந்தால் போதும்!

பஞ்சம் மட்டும் நாட்டைப் படையெடுத்து வந்து பாழ் செய்துவிடக் கூடாது, அதற்காக பணத்தை எவ்வளவு வேண்டுமானாலும் செலவிடத் தயாராக இருக்கிறார்கள் ஆளவந்தார், என்று அவர் கூறுகிறார்.

பஞ்சம் என்றால், அங்கே பட்டினி தாண்டவமாடும்! பசி பக்கமேளம் வாசிக்கும்!

ஆகவேதான் பட்டினியை நாட்டின் உள்ளே நுழையவிட மாட்டோம் என்று கூறியுள்ளார் அவர்.

பஞ்ச வெள்ளத்தை, பண அணையால் தடுக்கப் பின் வாங்காது ஆட்சி, என்று பேசியுள்ளார் அவர்.

பஞ்சத் தீயை வெள்ளிப் பணநீரால் அவித்துவிட முடியும் எனக் கூறுகிறார் அவர். அதற்காக ஆளவந்தார் தயங்கவில்லை யென்றும் எடுத்துக் கூறுகிறார்.

நம்நாட்டில் பஞ்சம் வரவில்லையா என்றால், பஞ்சம் வந்து வந்து போகிற நிலையைப் பார்க்கிறோம்.

ஒவ்வொரு துறையிலும், அது வருவதும் எட்டிப் பார்ப்பதும், பிறகு தலையை இழுத்துக்கொள்வதுமாக பஞ்சம் விளையாடுவதை நாம் அறிவோம்.

பஞ்சம் வராத இடம் இல்லை! பஞ்சத்தைப் பற்றிப் பேசாத நாவில்லை!

ஆனால் பஞ்சத்தை எவரும் வரவேற்று வாழ்த்து மடல் கொடுத்ததில்லை! ஆனாலும் வருகிறது!

நல்லதங்காள் காலத்தில் பன்னிரெண்டாண்டுகள் பஞ்சம் வந்ததால், தான்பெற்றமக்களை அழைத்துக்கொண்டு அண்ணனிருந்த ஊருக்குச் சென்றாள், எனக் கதை படித்திருக்கிறோம். ஆனால் அத்தகைய நல்லதங்காளை தினமும் சந்திக்கிறோம் நாட்டில் இன்று.

பஞ்சம் வந்ததாகப் படிக்கிறோம், சிற்சில சந்தர்ப்பங்களில்!

ஆனால் அந்தப் பஞ்சம் பறந்திட பகவான் அனுக்ரகம் கிடைத்தது! ஆகவே பஞ்சம் நீங்கி, செழுமை சேர்ந்ததெனமுடித்துள்ளனர்! பஞ்சம் வந்திடும். பரமசிவனை வணங்குவர் மக்கள். பக்தன் வரம் வேண்டுவான். பார்வதி சமேதராய், ரிடப வாகனமேறி வருவார் கைலாசவாசர்! கரத்தை உயர்த்துவார்! கலம் கலமாக நெல் குவியும்! இப்படிக் கண்டிருக்கிறோம ஏட்டுப் புளுகு மூட்டைகளில்!

பஞ்சம் வந்ததால், நம் நாட்டிற்குத் தஞ்சம் புகுந்தனர் பலர் என்ற வரலாற்று நிகழ்ச்சிகளும் நாம் அறிந்திருக்கிறோம்.

ஆனால் பஞ்சம் ஏன் வருகிறது என்று எண்ணிப் பார்த்ததில்லை.

பஞ்சத்தை விரட்ட பணத்தை கணக்கின்றி இறைக்கத் தயங்கார் ஆளவந்தார் என்கிறார் அவர். அவர் யார் தெரியுமோ? அவரும் ஒரு மந்திரி! கனமானவர்! சென்னை ரெவின்யூ மந்திரி சீதாராம ரெட்டி!

பஞ்சத்தைப் பற்றி ரெவின்யூ மந்திரி பேசுகிறார்! உணவு மந்திரி வாய் மூடியிருக்கிறார்! கேட்பீர்கள். காங்கிரஸ் சர்க்காரில் அதுதான் விசித்திரம்! அவரவருக்கு அளிக்கப்பட்ட இலாக்காவைத் தவிர பிற இலாக்காக்களைப் பற்றிப் பேசுவார்! உணவு மந்திரி கல்வி நிலை பற்றிப் பேசுவார்! கல்வி மந்திரி நிதியைப் பற்றிப் பேசுவார்! நிதி மந்திரி சட்டத்தைப் பற்றி விளக்குவார்! இப்படி விநோதக் காட்சியைப் பார்க்கலாம் நாளும், காங்கிரசாட்சியில்!

ஆனால் பஞ்சத்தைப்பற்றி மந்திரிகள் எல்லோரும் பேசுகிறார்கள் என்றால், பஞ்சம் அப்படிப் பரவியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

பஞ்சம் பரவாத பகுதியே இல்லாமல் போய்விட்டது!

பஞ்சமென்றால் உணவில்தான் என்று கருதுவர்.

ஆனால் நம் காங்கிரசாட்சியில், பஞ்சமென்றால், உணவில் மட்டுமல்ல, எல்லாத் துறையிலும் என்று அறிந்து கொள்ளவேண்டும்.

நான்காண்டுகளாக, உணவுப் பொருள் கிடைக்காததால் பட்ட அவதி கொஞ்ச நஞ்சமல்ல! பட்டினிச் சாவுகள் பலப் பல! பரிதாப மரணங்கள் வீதிகளில் கண்டிருக்கிறோம். கண்ணீர் வடித்திருக்கிறோம்.

ஆனால் பஞ்சம் இத்துடன் நின்றுவிடவில்லை. மேலும் தொடர்கிறது.

நூல் இல்லை நெசவாளிக்கு— எனவே நூல் பஞ்சம்! ஆகவே தொழிலாளி துடிக்கிறான்.

தொழில் பஞ்சம் — எனவே வேலையில்லாத் திண்டாட்டம்!

ஆடையின்றி, அவதிப்படுகிறார்கள் மக்கள்! அதிக விலை கொடுத்து

(8-ம் பக்கம் பார்க்க)

இதயம் குளிர்விக்கும் எமது வெளியீடுகள்!

சி. என். ஏ.
தீட்டிய
கபோதிபுரக் காதல்
1—4—0
புது காதலோவியம்!

கே. ஏ. மதியழகன்
தீட்டிய
அறிவின் தூதர்கள்
0—12—0
அரிய கருத்துச் சித்திரம்!

அடுத்து வருவது:—
மு. கருணாநிதி தீட்டிய
✲ "இரத்தக் கண்ணீர்" ✲

"திராவிடப்பண்ணை" தெப்பக்குளம், திருச்சி

திராவிடநாடு

காஞ்சி] 11—11—51 [ஞாயிறு

கடிதமும் கண்ணீரும்!

*

"சர்க்காரை எதிர்த்து சரமாரியாகப் பேசுகிறார்கள்! எங்கே சென்றாலும் ஏசுகிறார்கள்! எந்தப் பக்கம் திரும்பினாலும் இதே கூச்சல்! கண்டனமும் அதிருப்தியும் தாங்கமுடியவில்லை. இந்த அதிருப்தியையும் ஆத்திரத்தையும் எங்களால் சமாளிக்க முடியுமோவென அஞ்சுகிறோம்"

சென்னை முதலமைச்சர், திருவோலை ஒன்று தீட்டியிருக்கிறார், இந்தியப் பிரதமர் பண்டித நேருவுக்கு. அந்த ஓலையிலே, இதுபோன்ற தகவல்களைத் தந்திருக்கிறார். மனக் கலக்கத்தோடு அவர் விடுத்திருக்கும் இக் கடிதத்தின் மூலம் மற்றோர் தகவலையும் அறிவித்திருக்கிறார், பிரதமர் நேருவுக்கு.

"சர்க்காரைக் கண்டிக்கிறார்கள் என்றால் மாகாண சர்க்காராகிய எங்களைமட்டுமல்ல; மத்திய சர்க்காராகிய உங்களையும்தான்"
என்று, விளக்கியுமிருக்கிறார்.

மாகாண சர்க்காரைக் குறை கூறுகிறார்கள்—மத்திய சர்க்காரைக் கண்டிக்கிறார்கள்!

யார் கண்டிப்பது? விடுதலைபெறத் துடிக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் என்று குமாரசாமி ராஜா குறிப்பிடவில்லை — அக்கடிதத்தில். அவர்கள்தான் எதிரிகளாயிற்றே! எதிர்க் கட்சிகள் அல்ல, மத்திய சர்க்காரைக் கண்டிப்பதும், மாகாண சர்க்காரை ஏசுவதும். மாநில முதலமைச்சர், தெளிவாக, அதையும் குறிப்பிட்டிருக்கிறார். மத்திய ஆட்சியையும் மாகாண சர்க்காரையும் பத்திரிகைகள் கண்டிக்கின்றன! சட்டசபைகளிலே குற்றஞ் சுமத்துகிறார்கள்! எங்கே சென்றாலும் மக்கள் அதிருப்தி அனலை அள்ளி வீசுகிறார்கள்!

பத்திரிகையும் சட்டசபையும், மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவை. ஆனால், அவைகள், தம்முடையவையாகயிருந்தும், கண்டிக்கின்றன. அவைகள்மட்டுமல்ல; சர்க்கார் யாருக்காக இருக்கிறதோ, அவர்கள், அதிருப்தி அனலை வீசுகிறார்கள்—மக்கள் மன எரிச்சலோடு கூச்சல் போடுகிறார்கள்!

எதிர்க்கட்சிகளல்ல; மக்கள்—எதிரிப் பத்திரிகைகளல்ல; நமது ஏடுகள்—சாலை ஓரத்திலே அல்ல; சட்டசபையில—கண்டனமும் அதிருப்தியும் கனல் மழையாகப் பெய்வதாக, 'கனம்' மாகாண அமைச்சர், எழுத்துமூலம் தெரிவித்திருக்கிறார், இந்தியாவின் 'முடிசூடா மன்னருக்கு.'

எதிர்ப்போர் பட்டியலை விளக்கி, மாகாண முதல்வர் எழுதிய கடிதத்துக்கு, பதில் அனுப்பியிருக்கிறார், பண்டிதநேரு.

"அதிருப்தி பட்டுவிட்டால் போதுமா? ஒரு பொருள், கிடைக்கவில்லையென்றால், எவ்வளவு அதிருப்திபட்டால்தான் என்ன! அதிருப்திமூலம் பெற்றுவிடவா முடியும்?"

முகாரி எழுப்பிய முதலமைச்சருக்கு 'முடிசூடா' மாணிக்கம், தெரிவித்திருக்கிறார் — இதுபோல; எழுத்துமூலம்.

பத்திரிகை, சட்டசபை, மக்கள் மன்றம் ஆகியவைகளைக் காட்டி, அங்கே எழும்பும் அதிருப்தியை எடுத்து விளக்கி, 'அஞ்சுகிறோம், நிலைமை கட்டுக்கடங்குமோ' என்ற பரிதாபத்தை வெளிப்படுத்தி, வேண்டுகோள் விடுத்தமைக்கு, பண்டிதர் இதுபோன்ற பதிலைத் தந்திருக்கிறார்.

மாகாண முதலமைச்சர், அவ்வளவுதூரம் அதிருப்தியோடு, நாடே இருக்கிறது என்று சுட்டிக்காட்டி, கடிதம் தீட்டியது வேறு எதற்காகவுமல்ல; அரிசிக்காக!

ஆனால் பண்டிதரோ, "அதிருப்தியென்று மிரட்டுகிறீரே! அதனாலென்ன, அரிசியா வந்து குதித்துவிடும்?" என்று, கொஞ்சம் மனவேகத்தோடு, பதில் தந்திருக்கிறார்.

அவரது பதிலிலே காணும் பகட்டல்ல, நம் கருத்தைக் கவர்ந்தது; ஏனெனில் இதுபோன்ற பகட்டுச் சொற்கள், நமது மூலவர்கள் மீது, அடிக்கடி டில்லியார... வாரியிறைக்கப் படுவதும், இ... குள்ள 'வாடாத் திருமேனி'... அதையும் பன்னீர்த் துளியாக... ஏற்றுக் கொள்வதையும் நாம் அ... வோம்.

ஆனால் நம் சிந்தையைக் கவ... தது, பண்டிதநேரு தம் கடிதத்தி... குறிப்பிட்டிருக்கும் பின்வரும் வா... கியங்கள்தான்.

"அரிசி குறைவாகக் கிடைக்... காரணத்தால் மக்கள் அதிருப்... யோடிருப்பதாக நீர் எனக்கு எழு... யிருக்கிறீர். அதை நிவர்த்திக்க முடி... தவரை முயல்வோம். ஆனால் நீ... கள் கோருமளவுக்குத் தேவையா... அரிசியை அனுப்பிக்கொண்டே... யிருக்க எங்களால் இயலாது"

கேட்கிற அளவு, தர இயலாது... சஞ்சலம் சிறிதுமின்றி இத்தகவ... எழுதியிருக்கிறார், பண்டிதநேரு.

சென்னை முதலமைச்சர், பத்தி... கையின் கண்டனங்களைக் காட்டி... பொதுமேடைகளில் வீசப்படு... ஆத்திரத்தை காரணமாக இழுத்... சட்டசபை வாதத்தை துணை... கழைத்து, மக்கள் மன்றத்தி... எழும்பும் அதிருப்தியை எடுத்... விளக்கி, வேண்டுகோள் விடுத்தா... —டில்லி உணவு மந்திரிக்கல்ல!— பிரதமருக்கு! நேருவுக்கு!! கா... கிரஸ் தலைவருக்கு!!!

உணவு மந்திரியாரை கேட்டு எ... வும் பலன் ஏற்படவில்லையே, பி... தமரையாவது வேண்டிக் கொ... வோம் என்கிற ஆசையோடு, க... தம் எழுதினார், மாகாண முதல்வ... அதற்கு டில்லி மூலவர், இத்தகை... பதிலைத் தந்திருக்கிறார். அதோ... "இதோபதேசம்" ஒன்றையு... எழுதி அனுப்பியிருக்கிறார்.

"வெளி நாடுகளிலிருந்து அ... சியை அதிகமாக இறக்குமதி செ... யுங்கள் என்று யோசனை சொ... கிறார்கள். அவர்கள் யோசனை... என்றால் விளங்கிக் கொள்ள முடி... வில்லை........அடுத்த ஆண்டுக்கு... அரிசி கஷ்டம் ஏற்படலாம் என... அறிவுறுத்தியிருக்கிறீர்கள். அ... கான முன்னேற்பாடுகளையு... செய்துகொள்ள வேண்டும் என... குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆ... எனக்குத் தெரிந்த முன்னேற்பா... ஒன்றே ஒன்றுதான். அது உண... பழக்கத்தை மாற்றி அமைத்... கொள்வது தான்"

அரிசியால் ஏற்படும் அதிருப்தி பற்றி வேண்டுகோள் விடுத்த சென்னைக்கு டில்லி மூலவர், இத்தகைய திரு உபதேசத்தையும், 'இயலாதே!' என்கிற பரிதாபச் செய்தியையும் தந்திருக்கிறார்.

அரிசியை மட்டும் உணவாகக் கொள்ளாமல் கிடைப்பதை யெல்லாம் சாப்பிடப்பழகவேண்டுமாம்!—பண்டிதர் உபதேசம், இது.

ஆனால் கடிதம் எழுதிய மாகாண முதலமைச்சரோ, இந்த விஷயம் பற்றியும் தமது வேண்டுகோளில் விளக்கியிருக்கிறார்.

அரிசியை உணவுப் பொருளாக தென்னாடு கையாண்டு வருகிறது.

பாரம்பரியமாகவும் பழக்கமாகவும் இது இருந்துவருகிறது.

அரிசி தவிர, வேறெதையும் உணவாகக் கொள்ள இங்குள்ளோரால் இயலாது.

ஏனென்றால் கோதுமையை வாங்கி என்ன செய்வதென்றேசிறிது கூடத் தெரியவில்லை—திகைக்கிறார்கள்.

கோதுமையை அனுப்புவதால் பயனுமில்லை—பலனுமில்லை.

இவ்வளவு தெளிவாக, அரிசியின் முக்கியம் குறித்து, விளக்கியிருக்கிறார் சென்னை முதல்வர். அதற்கு டில்லி மூலவர், திருஉபதேசம் அருளியிருக்கிறார்!

இப்போதுதான் என்றல்ல, பல முறை வடநாட்டுத் தலைவர்கள், இத்தகைய உபதேசங்களைச் செய்தே வருகிறார்கள். தென்னாட்டிலும், கோதுமைக்குச்செல்வாக்கு உண்டு பண்ணும் ஆசை நெடுநாட்களாகவே அவர்கள் இதயத்தில் சுழன்று கிடக்கிறது.

"கோதுமை கூடாத பொருள். தீண்டுவது ஆபத்து" என்பதல்ல, நமது எண்ணம். "கோதுமையா? விஷமாச்சே அது!" என்று கூறவுமில்லை நாம் ஆனால், போதிய அரிசியைப் பெற்றுத்தர முடியும். என்று தனிப்பட்ட பணக்காரர் சர்க்காரைப் பார்த்து சவால் விடுகிறார்கள் — ஒரு சமயம், செட்டி நாட்டு முத்தையா செட்டியார் சென்னை மேல் சபையிலேயே பகிரங்கமாகக் கூறினார். அந்தப் பொறுப்பை என் வசம் விடுங்கள் என்றுகூட, ஆவலோடு கேட்டார்.

அந்தளவுக்கு ஒரு தனிப்பட்ட பணக்காரருக்குத் தைரியமிருக்கிறது! ஆனால் சர்க்காரோ, கலங்குகிறது!! இதோபதேசம் செய்கிறது!

ஏன் இது? கேட்கமாட்டார்களா, நம் போன்றோர்!

"தனிப்பட்ட முதலாளிகள்வசம் இப்பொறுப்பை ஒப்படைப்பதா?" —என்று ஆட்சியிலமர்ந்தோர், வீம்பு பேசலாம். அது சரியென்று கூடக் கூறுவோம். ஆனால், அத்தனிப்பட்டவர்கள் முடியும் என, சவால் விடுப்பது, இவர்களால் முடியாது என்று கூறப்படுமேயானால் எவரே ஏற்பர்! பொறுப்பில்லை அல்லது கவலையில்லையென்று தானே கருதுவர்.

இந்தக் கருத்து, எழும்பிய காரணத்தால்தான் மாநில முதலமைச்சர் நாட்டின் "அதிருப்தியை" விளக்கி, அப்போதாவது செய்யமாட்டார்களா என்கிற ஆசையால் "மத்ய சர்க்காரைக் கூட கண்டிக்கிறார்கள்" என்று குறிப்பிட்டு, கடிதம் தீட்டியிருக்கிறார்.

ஆனால், நேருவோ, "இயலாது!" "உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள்" என்று தெரிவிக்கிறார்.

"அரிசி சாப்பிடுகிறவர்கள் நாகரீகமில்லாதவர்கள்" என்று கூறுமளவுக்கு உணவு மந்திரி முன்ஷி, ஆவேசம் பெற்றார்.

அவர்கள், அவ்வளவுதூரம் கோதுமையை ஏன் வலியுறுத்த வேண்டும். உணவுப் பிரச்னையைத் தீர்க்க கோதுமை ஒன்றுதானா வழி!

அரிசி சாப்பிடுவோர் திடீரென கோதுமையை உணவாகக் கொள்வதென்றால் நடைமுறையில் மட்டுமல்ல, பொருளாதாரத் துறையில் கூட இங்குள்ளோரால் இயலாது! ஏழைகள், கிராம மக்கள் என்ன செய்ய முடியும், எண்ணெய் வாங்கவும், உருளைக்கிழங்கு பெறவும்!!

அரிசி பெற்றுத்தரும் வேலையில் ஈடுபடுவதை விட்டு, கோதுமைப் பிரச்சாரத்தில் ஏன், ஈடுபடவேண்டும்? வடநாட்டுக் கோதுமைக்கு மார்க்கெட் பிடிக்கும் ஆசையென்று இங்குள்ளோர் கருதினால், அது உண்மையென்றுதானே, நம்பும் படியிருக்கிறது.

கண்ணீர் சிந்துவதைப்போல, தன் மாகாணத்து நிலையை, ஒரு பிரதமர் எழுதுகிறார். அதற்கு, 'இயலாதே' என்று பதில் தருகிறார்—டில்லியார். அதோடு, உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளேன் என்று உபதேசமும் புரிகிறார். இந்த விந்தையை என்னவென்று சொல்வது!

இந்த விசித்திரமான காட்சியை எங்கே காணமுடியும்? இந்த வேதனை நீடிக்கவா, இன்னும் "ஒரே நாடு" என்று பலர் பேசுவதும், கூறுவதும்!

கண்ணீர் சிந்திக் கேட்டால். கவலையில்லாதவர்கள்போலப் பேசுகின்றனர். இறுமாப்பும், வேதனையும்! புயலும் திமிரும், பரிதாபமும்! டில்லியும், சென்னையும்!—இந்நிலை எப்போது மாறுமோ?

—❀—

"கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்"

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி குறித்து நண்பர் இரா. நெடுஞ்செழியன் M. A. அவர்கள், தீட்டியிருக்கும் 'கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்' என்ற ஏடு வரப் பெற்றோம். செந்தமிழ் விளையாடும் அவரது சிந்தனை யோட்டம் நிரம்பிய இந்நூல், நமது மாற்றார் மதிவிளக்கம் பெறவும், கண்டனங்களை வீசுவோர் தெளிவு பெறவும், மிகமிக உபயோகப்படும் என நம்புகிறோம். ஒவ்வொரு கழகத் தோழர் கையிலும் இந்நூல் ஒரு கேடயமாக விளங்கும். நண்பர் அவர்களின் தீந்தமிழ் நடையில் இதுபோன்ற பல நூல்கள் வர வேண்டுமென விரும்புகிறோம்.

நமது கழகத்தின் இலட்சியம், கண்ணீருடன் நம் கழகம் பிறந்த காரணம், நமது தியாகத்தால் கழகம் வளரும் விதம், அத்தனையையும் அழகுபட, தெளிவாக, தீட்டித் தந்துள்ளார். கருத்து மணம் கமழும் இந்நூல், கழகத் தோழர்களின் சிந்தனைக்கோர் விருந்து—ஆர்வத்துக்கோர் தூண்டுகோல்.

விலை அணா 12

மன்றம் பதிப்பகம்

12, வைத்தியநாதமுதலி தெரு

சேத்துப்பட்டு, சென்னை 10.

5-ம் பக்கத் தொடர்ச்சி

வாங்கவோ அவர்களுக்கு பணமில்லை! துணிப் பஞ்சம் அவர்களை வாட்டி வதைக்கிறது.

இருக்க இடமின்றி ஏங்குகின்றனர். இடப் பஞ்சம்!

ஆசிரியர்களோ, அதிகமில்லை. இருப்பவர்களுக்கு ஊதியம் சரியாக இல்லை. அதனால் பள்ளிக்கூடங்கள் பஞ்சம்!

மாணவர்களுக்கோ, சென்று படிக்க இடமின்மையால் கல்விப் பஞ்சம்! அவர்களைச் சேர்க்கும் முறையில் ஏற்பட்ட அநீதியால், கிடைத்த இடத்திற்கும் இப்பொழுது பெரும் பஞ்சம்!

நடுத்தர வகுப்பினரோ குடும்ப பாரம் தாங்காமல் தவிக்கிறார்கள். அவர்கள் தொட்டதற்கெல்லாம் பஞ்சம், பஞ்சம் என பதைக்கிறார்கள்.

ஆகவே, அவர்கள் பணியாற்றுமிடங்களில் எல்லாம், ஊதியத்திற்கு மேல் ஊதியம் தேடவேண்டியவர்களாகி விடுகிறார்கள்! ஆகவே லஞ்சம் தலைவிரித்தாடுகிறது! அங்கு நேர்மைப் பஞ்சம்! நாணயப் பஞ்சம்!

சமூகத்திலே பலப் பல பஞ்சங்கள் பவனி வருகின்றன.

இவைகளைக் காணும் மந்திரிகளோ, அவைகளை விரட்டியடிக்க முடியாமல் தவிக்கிறார்கள்! காரணம் அவர்களுக்கு 'அது' பஞ்சம் போலும்!

பஞ்சத்தை விரட்ட, பணத்தைச் செலவிட பயப்படவில்லையென்கிறார் சீதாராமர். ஆனால் பஞ்சம் வந்ததற்குக் காரணம் பணமின்மையால்மட்டுமல்ல!

பஞ்சம் ஏன் ஏற்பட்டது? தேவைக்கு வேண்டிய அளவு பொருள்கள் கிடைக்கவில்லையாதலால்!

உள்நாட்டில் தேவைக்கு வேண்டிய அளவு பொருள்கள் கிடைக்கவில்லையென்றால், அந்த அளவு உற்பத்தியை பெருக்கவேண்டும். அதுவும் முடியவில்லையென்றால், வெளிநாடுகளிலிருந்து வேண்டிய அளவு இறக்குமதி செய்திருக்க வேண்டும்.

இரண்டும் நடைபெறவேண்டுமானால் பணம் வேண்டும் என்பது ஒத்துக்கொள்ளப்பட வேண்டியதானாலும், பணம்மட்டும் போதுமா? அவர்களே கூறுகிறார்கள், இயற்கை சதி செய்துவிட்டது என்று! அதனால்தான் பஞ்சம் வந்ததென்று! அதுபோலவேதான் வெளிநாட்டுப் பொருள்களை வரவழைக்க காலம் சரியில்லையென்றும், போக்குவரத்து வசதிகள் சரியாக கிடைக்கவில்லையென்றும் பேசுவதைக் கேட்டிருக்கிறோம்!

இருந்தாலும், பணத்தைச் செலவிட அஞ்சோம், பஞ்சம்மட்டும் பறந்தால்போதும் என்கிறார் மந்திரியார்!

மந்திரியார் கூறுவதைப்போல, பணத்தால் பஞ்சத்தை துரத்திவிட முடியும் என்று வைத்துக்கொள்வோம்.

சென்னை சர்க்காரிடம் பணம் இருக்கிறதா என்று கேட்டால், அதற்கு அவர்கள் பதில் விந்தையாக இருக்கும்!

சீதாராமரின் இரண்டு பேச்சுக்களை எடுத்துக் கொண்டாலே போதும்! வேடிக்கையாகவும் இருக்கும், வேதனையாகவும் தோன்றும்!

பணத்தைச் செலவிட தயங்காது பஞ்சத்தை விரட்டும் விஷயத்தில், என அனந்தப்பூரில் பேசினார்.

அவரே, கோயம்புத்தூரில்பேசும் பொழுது, சர்க்காருக்கு பணநெருக்கடி அதிகமிருப்பதால், பஞ்சம் வரும் என எதிர்பார்க்கப்படும் இடமானாலும், கஞ்சித் தொட்டிகள் வைக்கமுடியாது. அந்தந்த பகுதியிலுள்ள பணம் படைத்தோரே இந்த நற்காரியத்திற்கு உதவிசெய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பேசிய இடங்கள் இரண்டு — அனந்தப்பூர்! கோயம்புத்தூர்!!

பேசியவர் ஒருவரே — கனம் சீதாராமரே!

அனந்தப்பூரில் பஞ்சம் பரவியிருக்கிறது.

கோயம்புத்தூரிலே பஞ்சம் நுழையலாமா என்று பதம் பார்க்கிறது. இதுதான் வித்தியாசம்.

இதிலிருந்து தெரிகிறது, நம்மா வார்கள் கையில் பணம் இல் யென்று.

இவர்கள் பணம் என்றவுடன் பறந்துசென்று, டெல்லி தேவன் களிடம் பல்லிளித்து நிற்பதை நா பார்க்கிறோம். ஆகவே பணமில் சீதாராமர் செப்பிய பிறகு நமக்கு தெரியவேண்டிய அவசியமில்லை.

இவர்களிடம் பணம் இருப் தாகவே வைத்துக்கொள்வோம் அப்பொழுதாவது, இவர்கள் பஞ் சத்தை விரட்டும் காரியங்களை செய்துவிடமுடியாது.

உதாரணமாக, சென்னை அரி யில்லாகொடுமையால் தவித்துக் கொண்டிருந்தது. பர்மாவில் நொய் யரிசி இருப்பதாகவும் தருவதாக வும் வாக்களித்தனர். சென்னையி லுள்ள தனிப்பட்ட வியாபாரிகள் தாங்கள் வரவழைத்துத் தருவதாக முன் வந்தனர்.

ஆனால் சென்னை செயலற்றுக் கிடந்தது.

ஏன்? வெளிநாட்டிலிருந்து நேர டியாகப் பொருள்களை வரவழைக்க அதிகாரம் சென்னைக்கில்லை. அந்த அதிகாரம் டெல்லிக்கு! ஆகவே தான் பஞ்சம் விரிவடைந்தது!

ஆகவே சீதாராமர் பணத்தை அள்ளித்தெளிப்போம் என்கிறார். ஆனால் அவரிடம் பணம் இல்லை! பணம் மட்டுமல்ல, அதிகாரமும் இல்லை!

பஞ்சத்தைப்போக்க, பரமசிவன் வருங்காலமல்ல! பாராள்வோர் தான் அதற்குப் பரிகாரம் தேட வேண்டும்!

பரிகாரம் பணம் என்கிறார் சீதாராமர். பணமிருந்தாலும், அதிகாரமில்லையென்று அவர் கூறவில்லை. ஆனால் அதுதான் உண்மைநிலை!

பஞ்சம் பறந்திடவேண்டும் என்கிறார் மந்திரியார். நாமும்தான் விரும்புகிறோம்.

ஆனால் பஞ்சத்தைப் போக்கும் மார்க்கத்தை ஆளவந்தார் அறிந்து பணியாற்றவேண்டும். வாய்ப் பேச்சால், பஞ்சம் பறக்கிறது பாரீர்என்பதால் பஞ்சம் பறந்துவிடாது!

★

தங்கம் ஒரு தட்டில்! பஞ்சு மறு தட்டில்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

மத்திய சர்க்காரால் மதிக்கப்படுவதால்தான்! சாதாரண ஒரு வழக்கை தானே விசாரிக்கும் உரிமை கூட இல்லாமலிருப்பதால்தான்! அந்த வழக்கை வேறிடத்திற்கு மாற்றச் சொல்லும் அதிகாரம் டெல்லிக்கு இருப்பதால்தான்! இதனை உணர்ந்திட கன்னடம் சந்தர்ப்பம் தருகிறது.

அதிகாரம் வடக்கே, அடங்கு வாழ்பவர் தெற்கே! ஏன் இந்தநிலை என்பதுதான் திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தின் கருத்து!

ஒரு தட்டிலே ஏராளமான தங்கம், மற்றொரு தட்டில் கொஞ்சம் பஞ்சு! எடை எப்படி சரியாக இருக்கமுடியும்! சாய்ந்த தராசாகத்தானே இருக்கும், என்ற கேள்விதான் திராவிடநாடு திராவிடருக்கே என்பது!

அதுவும், நாள் ஆக ஆக, டெல்லியின் குரலும், கனத்து விட்டது! செபலும் தடித்துவிட்டது!

கன்னடம், மற்ற நாடுகளுக்கு வழி காட்டுகிறது!

கன்னடம், மத்திய சர்க்காரை எப்பொழுதும் எதிர்க்கவேண்டும் என்று எண்ணங் கொண்டதல்ல. இதுவரை, பல சந்தர்ப்பங்கள் அப்படித் தூண்டிவிட்டும், அதன்படி நடந்துகொள்ளவில்லை!

இன்று, அநீதியாக ஒரு சட்டத்தை மத்திய சர்க்கார், வீசுகிறதென்றால் அதற்கு எப்படி அடங்கிப் போகிறது என்று கன்னடம் கேட்கிறது! ஆகவேதான் மத்திய சர்க்காரை எதிர்ப்பது என்று முடிவு செய்துவிட்டது.

இந்த முடிவிற்கு அவர்கள் அவசரப்பட்டு வந்துவிடவில்லை! ஆர அமர யோசித்தபிறகே வந்துள்ளனர்!

சட்ட சிக்கல்களை ஆராய்ந்தனர்! வழக்கின் சிக்கல்களையும் எடுத்துப் பேசினர்! மத்திய சர்க்காரின் கட்டளையையும் இணைத்துப்பார்த்தனர்! இவையத்தனையும் முடிந்த பிறகே எதிர்ப்பது என்று முடிவு செய்தனர்.

சட்டசபையிலே, சட்ட மந்திரி பாஷ்யம் எடுத்து விளக்கியுள்ளார்.

ஒரு வழக்கை வேறொரு நீதி மன்றத்திற்கு மாற்றலாம். அப்படி மாற்ற மாகாண சர்க்காருக்கே அதிகாரம் இருக்கிறது.

கி. பி. கோ. 527 பிரிவுப்படி, அந்த அதிகாரம் மாகாண சர்க்காருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மாற்றிக்கொள்ள முடியும். அதன்படி வழக்கை இடம் மாற்ற தேவையில்லையென்றே விட்டு விட்டனர். ஆனால், மத்திய சர்க்காரின் குறுக்கீடு, அந்த அதிகாரத்தையும் அவமதித்து விட்டது. மாகாண சர்க்காரின் உரிமையை துச்சமெனத் தள்ளிவிட்டது!

அப்படியே இடம் மாற்றுவதால், இந்த வழக்கிலுள்ளவர்களுக்கு நன்மை ஏதும் இல்லை. செலவும், தொல்லையும் வளருமே தவிர, வேறொன்றும் ஏற்படாது!

நீதி சரியாக பரிபாலிக்கப்படாது என்பதற்கும் ஆதாரமில்லை. காரணம், கொலைக்காளாக்கப்பட்டவர் பிரதம நீதிபதி என்பதாலேயே, அங்கு நீதிதேவர் பஞ்சம் ஏற்பட்டு விடவில்லை. அப்படியிருந்தாலும் அதனைத் தீர்மானிக்கவேண்டியவர்கள் அவர்களே தவிர மத்திய ஆட்சியினரல்ல!

ராஜா வழக்கு, உள்நாட்டு விவகாரம். இதில் மத்திய ஆட்சி தலையிடுவது பொறுக்க முடியாத செய்கையாகும்.

சட்ட மந்திரி விளக்கியிருக்கிறார் தெளிவாக, திட்டவட்டமாக!

ஆகவே, அவர்கள் ஆத்திரத்தில் அந்த முடிவிற்கு வரவில்லை! அவசரத்திலும், எதிர்த்திடுவது என்று தீர்மானித்துவிடவும் இல்லை! அது மட்டுமல்ல, எதிர்ப்பதால் என்னென்ன விளைவுகள் வரக்கூடும் என்பதையும் முன் கூட்டியே யோசித்தே, அந்த முடிவிற்கு வந்துள்ளனர்!

அவர்கள், அறப்போர் தொடுத்திருக்கிறார்கள் என்றால், ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, தெளிவான ஆராய்ச்சிக்குப் பிறகு! ஆகவே கன்னடங் காட்டும் வழி, தென்னாட்டிற்கு தேவையானது என்று நாம் கூறுகிறோம்.

மக்கள் மனதைப் புண்படுத்தாமல், வேறு முறைகளைக் கூடக் கையாண்டிருக்கலாம் ஜனாதிபதி. ஒரு வழக்கை, வேறு நீதி மன்றத்திற்கு மாற்ற என்பதைவிட, அந்த நீதிபதியை மாற்றியிருக்கலாம். அந்த அதிகாரமும் அவர் கையில் தானிருக்கிறது! அதைச் செய்யவில்லை! அடக்குமுறைகளுக்கெல்லாம் தலைமை வகிக்கும் சட்டம் ஒன்றை ஏவியிருக்கிறார் என்றால், அவர்கள், சிந்திக்காமலா, இந்தத் தீர்மானத்திற்கு வந்திருப்பார்கள்? 222 பிரிவின்படி நீதிபதியை மாற்றாமல், 371 பிரிவின்படி, வழக்கை மாற்றச் சொல்கிறார்கள் என்கிற பொழுது, கன்னடம், ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய பிறகே, இது அடாது, நிறுத்தப்படவேண்டும், இந்த அநீதியை எதிர்த்து கன்னடமே போரிடவேண்டும் என்று முடிவிற்கு வந்திருக்கிறது!

ஆரம்பத்திலிருந்து, மத்திய ஆட்சியுடன் ஒத்துழைத்ததற்கு கன்னடத்திற்கு, மத்திய ஆட்சி அளித்துள்ள பரிசு, இந்த 371வது சட்டப் பிரயோகம்! இது குறித்து யோசிக்காமல் அவர்கள் இறங்கிவிடவில்லை!

வெள்ளத்தைத் தடுக்கவேண்டும் என்றால், வெள்ளத்தால் வரும் வேதனைகளை அறியாமல் இருக்க மாட்டான்.

புயலில் போரிடப் புகுவதானாலும், புயலால் விளையும் பொல்லாங்குகள் புரியாமலிருக்காது.

தீயை அணைக்க முயற்சிப்பவனுக்கு அதன் தீமைகள் தெரியாமல் போகாது.

இருந்தும் மனிதன் வெள்ளத்தை தடுக்கிறான், அணைகட்டி! புயலை வெல்கிறான் மனிதன். கலத்தை கரைக்கு கொண்டுவருவதன் மூலம்! தீயைத் தணிக்கிறான், நீரைப் பாய்ச்சி!

பிறப்பு

பெரியகுளம் தோழர் மீ. சு. இளமுருகு—பொற்செல்வி தம்பதிகளுக்கு, 16—10—51ல், பெண் மகவு பிறந்தது.

இருக்கும் ஒரே வழி இதுதான்

வளர்ந்திடும் புதிய ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதால் வரும் விளைவுகள் அவர்களுக்குத் தெரியாததல்ல! தெரிந்தே, இந்த சமர் புரிந்திட புறப்பட்டுள்ளனர்!

கன்னடம், மத்திய ஆட்சியின் கட்டளையை மீறிவிட்டது என்றால், மத்திய ஆட்சி, வாய்மூடிக் கிடந்து விடாது!

டெல்லி அதிகார மலையாயிற்றே! அசைந்தால் போதுமே! நசுங்கிவிடும் கன்னடம்! தெரியும் அவர்களுக்கு, இருந்தும் தங்கள் சுயமரியாதையை, நாட்டின் மானத்தைக் காக்க போர்க் கொடி உயர்த்தியுள்ளனர்.

356 பிரிவின்படி, நாட்டையே அடிமைக் காடாக்கலாம்.

365 பிரிவின்படி, மத்திய ஆட்சியின் கட்டளையை ஏற்க மறுத்து விட்டது என்று கூறி நடவடிக்கை எடுக்கலாம்.

மந்திரி சபையைக் கலைத்துவிடக் கூட முடியும் அவர்களால்.

எத்தகைய நடவடிக்கையும் எடுக்கலாம். அல்லது நிலைமையைக் கண்டு சமாளிக்கும் காரியங்களில் கூட ஈடுபடக்கூடும். அதுபற்றிய கவலை நமக்கில்லை.

மத்திய ஆட்சி ஒரு கட்டளை அனுப்பியிருக்கிறது. அதனை மாகாண ஆட்சி எதிர்க்கிறது.

சட்ட சபையே, எதிர்த்துப் போராடியிருக்கிறது.

எதிர்த்து தீர்மானம் கொண்டு வந்தார் நாயக்.

அதனை ஆதரித்தார் கோவிந்த ரெட்டி.

மக்களுக்கு மத்திய சர்க்கார் விடுத்துள்ள சவால் இது என்றார் வீரண்ணா.

அடங்கி அடங்கிப் போனதின் விளைவென்றார் சித்தப்பா.

சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவதானாலும் சரி என்றார் மகம்மது ஷரீப்.

எல்லோருடைய முழு ஆதரவையும் பெற்றுள்ளது இந்த எதிர்ப்பு என்றார் சென்னபாயப்பா.

மத்திய ஆட்சி, மக்கள் சபையையே எதிர்க்கிறது என்று அறிவிக்கவேண்டுமென்றார் சையது அப்துல் ரஹ்மான்.

சட்ட சபை, தனது எதிர்ப்பைக் காட்ட, ஒத்திவைக்கப்படவேண்டும் என்றார் காண்டேஸ்வர்.

மந்திரி சபையே ராஜினாமா செய்யவேண்டும் என்றார் ஹட்டீசு.

இந்தக் கட்டளை, மத்திய ஆட்சி மந்திரிகளை மதிக்கவில்லை யென்பதை மட்டுமல்ல, சட்ட சபை அலட்சியப்படுத்தப்படுகிறது என்பதை மட்டுமல்ல, மைசூரையே அவமானப் படுத்துகிறது என்பதைக் காட்டுகிறது என்றார் கோவிந்தா ரெட்டி.

சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் ஆத்திரத்தைக் காட்டினர்! அவர்கள் தூங்கும் தோழர்களல்ல, கைதூக்கும் கனவான்களுல்ல, நாட்டின் மானத்திற்காகப் போராடும் மாவீரர்கள் என்பதை நிரூபித்தனர்!

கட்சி பேதமற்ற ஆதரவு, இந்த எதிர்ப்புக்கு! மந்திரிகள், எதையும் தாங்குவோம் என்ற உறுதியோடு இதற்கு தலைமை தாங்குகிறார்கள்!

சட்டமியற்றிய அம்பேத்கார் விலகிவிட்டார்! அந்த சட்டம், எதற்குப் பயன்படுத்துவது என்று தெரியாமலேயே, தாறுமாறாக உபயோகப் படுத்தப்படுவதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

அவசர கால சட்டம் என்றும், சரியாக நிர்வாகமில்லா ஆட்சியிலேயே இது பயன்படுத்தப்படும் என்றும், முன்னேற்றப் பாதையில் முன்னணியில் நிற்கும். மைசூர் போன்றவைகளுக்கு இது உபயோகப்படுத்தப்படமாட்டாது என்றும் உறுதி பன்முறை தந்திருந்ததை மறந்துவிட்டார்கள்.

இன்று அந்த சட்டத்தை, வீசியிருக்கிறார்கள்!

சட்டத்திற்கு விரோதமான தலையீடு, இன்று, மத்திய ஆட்சி எடுத்துள்ள நடவடிக்கை!

கன்னடம் மட்டுமென்ன, நாட்டின் தன்மானத்தில் நம்பிக்கையுள்ளோர் எவருமே எதிர்க்கத்தான் செய்வர்.

அதுவும், எதுவரும், எதுபோகும்! என்ற எண்ணமில்லாது, துணிந்து போரிடத்தான் முனைவர்.

திராவிடத்தில் ஒரு பகுதியினர், கனிமொழி பேசிடும் கன்னடர், அந்தப் போரின் முன்னணி வீரர்களாகி விட்டனர்.

மத்திய ஆட்சியின் கட்டளையை மீறுவது சாதாரணமான காரியமல்ல! அதனைக் கன்னடம் செய்கிறது இன்று என்பதோடு நின்றுவிடக் கூடியதுமல்ல! மத்திய ஆட்சியின் கொடுமைக்காளாகும் எல்லோருமே, இதனை விழிப்புடன் காண்கிறார்கள்!

மேலும் இதைத் தவிர வேறு வழியுமில்லை! அவர்களுக்கு விட்டிருக்கும் ஒரே வழி இதுதான்— அதுவும் மிக நேர்மையான வழி! மக்கள் தீர்ப்பிற்கும், மனச்சாட்சிக்கும் விரோதமாக நடந்திட அவர்கள் அடிமைகளல்ல, வடநாட்டாதிக்கத்திற்கு! சட்டத்தால் கட்டுபட்டவர்கள். ஆனால் அது நேர்மையும், நீதியும் சேர்ந்து செய்யப்படுவதாக இருக்கவேண்டும். ஆகவே, கன்னடம், நீதியற்ற குறுக்கீட்டை எதிர்க்கிறது!

இம்மாதிரி திடீர் சட்டப்பிரயோகத்தைக் கண்டு கன்னடம் ஆச்சரியப்பட்டது! ஆனால், அதற்காக அடங்கிவிடவில்லை! எதிர்த்து விட்டது!

திராவிட இயக்கத்தின்
வரலாற்றினை விளக்கிடும்
அருமையான சிறு எழுத்தோவியம்
ஈ. வே. கி. சம்பத் பேசுகிறார்
என்னும் புத்தகம், விலை **0-3-0**
தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 ஸ்டாம்பு அனுப்பலாம். முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை விற்பனைக்கழிவு 25% தபால் செலவு இலவசம்.
பரிதிபதிப்பகம்,
திருத்தணி P. O.

அதிகாரத்தாலான மேருமலை டெல்லி!

தன் மானத்தை விட்டுவிட்டு எந்த இனமும் வாழ முடியாது! சுயநிர்ணயம் இல்லாத நாடு உருப்பட முடியாது! இதனை உணர்ந்து கன்னடம் பணியாற்றியிருக்கிறது!

இந்திய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு, சட்டப் போர்கள் நடந்ததில், முக்கியமானது, இந்தக் கன்னடப் போர்.

மத்திய ஆட்சிக்கும், மாகாண ஆட்சிக்கும் நேரடியான எதிர்ப்பு வந்திருப்பது, கன்னடத்தில்தான்.

சட்டத்தின் மூலம் மத்திய ஆட்சி மோதிற்று! அதே சட்ட வரம்புகளைக் காட்டியே, மாகாண ஆட்சி மோதியிருக்கிறது!

இது வரும் என்று நமக்குத் தெரிந்தே, நாம் காத்திருந்தோம். காத்திருந்தது வீண் போகவில்லை. கன்னடத்தில் நம்பிக்கை அரும்பு தோன்றுகிறது! அந்த அரும்பை, கருக்க, அல்லாடி கச்சை கட்டுகிறார்! வெங்கட்ராம சாஸ்திரியார் ஒரு மூலையிலிருந்து தோள் தட்டுகிறார்! 'இந்து' வேறு, கன்னடத்தின் உரிமையுணர்ச்சி அரும்பை, விஷ வார்த்தைகளை வீசி நாசமாக்கிடத் துடிக்கிறது! அந்த அரும்பை, ஆரம்ப நிலையிலேயே கருக்கிவிட மத்திய ஆட்சி முனையும். முடிந்தாலும் முடியலாம். அது வேறு பிரச்சினை, ஆனால், அந்த அரும்பு தோன்றிவிட்டது என்பதை மறுக்க முடியாது!

இந்திய அரசியல் திட்டத்தை நிறைவேற்றுகையில், திராவிடப் பெருங்குடி மக்களின் உண்மைப் பிரதிநிதித்துவம், அந்த அரசியல் நிர்ணய சபையில் இல்லை. ஆகவே அன்றும் எதிர்த்தோம். அதன் அறிகுறியாக, அந்த அரசியல் திட்டத்தின்படி நடத்தப்படும் தேர்தலிலும் பங்கு கொள்ளவில்லை!

அந்த அரசியல் திட்டப்படி, மாகாண ஆட்சிகள் உரிமைகள் உறிஞ்சப்பட்டுவிட்டன. பெருமை சீரழிக்கப்பட்டுவிட்டது என்று நாம் எடுத்துக்காட்டி வருகிறோம்.

மாகாண ஆட்சி, மத்திய ஆட்சியினரால் அவமதிக்கப்படுகிறது என்பதற்கு அப்பப்பொழுது ஆணித்தரமான ஆதாரங்கள் காட்டி வந்திருக்கிறோம்.

உணவில், மத்திய ஆட்சியின் மமதையைக் காட்டியிருக்கிறோம்.

நூலில், அதன் எதேச்சாதிகார போக்கை எடுத்து விளக்கியிருக்கிறோம்.

நிதி விஷயத்தில், கரி பூசி கைவிரித்தனுப்பும் காட்சிகள் பல சித்திரித்திருக்கிறோம்.

இப்படி அடுக்கடுக்காக காரணங்களைக்காட்டி மத்திய ஆட்சி மமதையோடு நடந்து வருவதை விளக்கியிருக்கிறோம்.

இதற்குக் காரணமும் காட்டியிருக்கிறோம். அதனிடம் குவிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அளவு அதிகம். அதனால்தான் இப்படி நடந்து கொள்கிறது என்பதை விளக்கியிருக்கிறோம்.

மாகாண சர்க்கார் மண்டியிடுவதற்குக் காரணம், அதற்குள்ள அதிகாரமும், உரிமையும் குறைவு என்பதால்தான் என்பதையும் உணர்த்தி வருகிறோம்.

இத்தகைய நேரத்தில் கன்னடம் கை கொடுக்கிறது!

இந்திய அரசியல் திட்டத்தினையே கன்னடம் எதிர்க்கிறது! அதுவும் சாதாரணமாக அல்ல, சட்டசபையையே, போர்க்களமாக்கி, சர்வ கட்சி உறுப்பினர்களையே போர்வீரர்களாக்கி, மந்திரிகளே தளபதிகளாக இருந்து, சட்டங்களையே ஆயுதங்களாக ஏந்தி, போர் தொடுத்திருக்கிறார்கள்! இந்தப்போரின் ஆரம்ப விழா நடந்துவிட்டது.

கை கொடுக்கவில்லை யென்றிடுவோருக்கு, கைகொடுத்திருக்கிறது கன்னடம்; அந்தக் கரம் காட்டிய வழி நடக்க காத்திருப்போர் ஏராளம் என்று கூறுகிறோம்.

★

முகவரி மாற்றம்

இசை முரசு. இ. எம். அனீபா
மோஸஸ் லாட்ஜ்
5. ஹுஸைன் அலிகான் தெரு,
ராயப் பேட்டை,
சென்னை—14

ஆங்கிலத்தில் முதல் அறிவு ஏடு

திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை வீசுகிறார்கள்! அவைகளுக்கு ஆணித்திறமான விடைகளை அளித்து தருகிறது, இந்த ஏடு.
விலை பன்னிரண்டணு.

A PLEA
for
UNDERSTANDING
ஆசிரியர்:
எஸ். வேதரத்னம், எம். ஏ.

அகில உலகிலும் நம் குரல் ஒலிக்கத் தொடங்குகிறது என்பதின் அறிகுறி இந்த ஏடு. தி. மு. க. வின் செய்தி இலாகா (Board of Information and Publicity) அனுமதிபெற்றது இந்நூல்.

விவரங்களுக்கு
வான்காட் பப்ளிஷிங் ஹவுஸ் : : திராவிடநாடு நிலையம், காஞ்சிபுரம்.

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

டிசம்பர் 13, 14, 15, 16

நாட்களில் நடைபெறும்.

—✕—✕—

தலைவர், திறப்பாளர்

மதுரையில் கூடும் பொதுக் குழுக் கூட்டத்தில்தான், தலைவர், திறப்பாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பர்.

மாநாட்டுக் குழுக்கள்

மாநாட்டுப் பணிகளைப் பகிர்ந்து பணியாற்றும் பல குழுக்களும் அங்குதான் தேர்ந்தெடுக்கப்படும். தற்காலிகமாக இப்பொழுது இயங்கி வரும் குழுக்கள், தேர்ந்தெடுக்கப்படும் குழுக்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும்.

பந்தல்

சென்னையில் எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் பந்தலமைப்புக்காரர்கள் பலர் வரவழைக்கப்பட்டு, பந்தலமைப்புபற்றி தகவல் தரும்படி கோரப்பட்டிருக்கிறார்கள்.

முகப்பு அலங்காரம்

சென்னை பிரபல ஓவிய நிபுணர்கள் பாலு பிரதர்ஸ் முகப்புக்கான மூன்று வாயில்கள் அமைந்த சித்திரச் சுவர்களைச் செய்துவருகிறார்கள். நேஷனல் பிக்சர்ஸ், ஜுபிடர் பிக்சர்ஸ் ஆகியோர் இரண்டு வெளிவாயில்கள் அமைக்க ஒத்துக்கொண்டுள்ளனர்.

தொண்டர் படை

மாநாடு சென்னையில் நடைபெறுவதால், சென்னைக்கு அண்மையிலுள்ள இடங்களிலிருந்தே தொண்டர்கள் தேர்ந்தெடுப்பது நல்லதெனக் கருதி, சென்னையிலும், காஞ்சியிலும் தொண்டர் படையினர் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் பயிற்சி யளிக்கப்பட்டு வருகின்றது. தொண்டர்களுக்கு கருப்பு, சிகப்பு மேலுங்கிழுமிருந்து நம் கொடியை நினைவூட்டும் குல்லாய்கள் அளிக்கவும் முயற்சிக்கப்படுகிறது. வெள்ளை நிற மேல் சட்டையும், நீலநிற அரைக் கால் சட்டையும் அணிந்து பணியாற்றுவார்கள், மாநாட்டுத் தொண்டர்கள்.

உறுப்பினர் சேர்க்கும் நிலையம்

மாநாட்டிற்கு வரும் தோழர்கள் அனைவரும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், உறுப்பினராகச் சேர்ந்துகொண்டால், சேர்ந்த உறுப்பினரின் எண்ணிக்கையை திரும்பிப் பார்க்கும் பொழுது பூரிப்புதானே ஏற்படும். அந்த வசதியை அளிக்க தனி நிலையம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஓவியக் காட்சி

ஓவியக் காட்சிக்கான சித்திர வேலைகள் ஏறத்தாழ முடியுந்தறுவாயிலிருக்கின்றன. மாநாட்டுக்கு வருவோரின் கண்களுக்கும், கருத்துக்கும் களிப்பூட்டுவதாக அமையும் ஓவியக் கண் காட்சி.

கலை நிகழ்ச்சிகள்

மாநாடு நடைபெறும் நாட்களில், காலை, மாலை, இரவு ஆகிய நேரங்களில், நாதசுரம், இன்னிசை, நாடகம், நடனம் முதலிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிற வேலைகள்

மதுரையில் நடைபெறும் பொதுக்குழுவின் முடிவுகளின்படி, மாநாட்டு வேலைகள் எல்லாம் தொடர்ந்து நடைபெறும்.

விளம்பரக் குழு.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,